**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**
**முதலாம் ஆண்டு – முதற் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFFLINE WRITTEN EXAMINATION)**

**P201 – மொழிபெயர்ப்பியல்**
**ஜனவரி – பிப்ரவரி 2024**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு: பிரிவு – 1இல் இருந்து அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. மொழிபெயர்ப்பின் மிக முக்கியமான பயன்கள் யாவை?
2. சீனத்து மகளிர் பற்றிய கதைகளின் தமிழ்ப் பெயர் என்ன?
3. மிருச்சகடிக நூலின் தமிழாக்கம் என்ன?
4. உயிரோட்டப் புலப்பாட்டுச் சிக்கல் எப்பொழுது எழுகிறது?
5. மொழிபெயர்ப்பின் நோக்கம் என்ன?
6. மொழிபெயர்ப்பின் இரு களங்கள் எவை?
7. மொழிபெயர்ப்பாளருக்கு எத்தகைய பார்வை வேண்டும்?
8. மொழியின் வளர்ச்சிக்கு ஆதாரமானவை எவை?
9. தமிழ்மொழி எத்தன்மையுடையது?
10. இரட்டைக் கூட்டுப்பெயருக்குச் சான்றுகள் தருக.
11. நிகண்டின் அடிப்படைத் தன்மை யாது?
12. சொல்லாக்கம் மூலம் உருவாக்கப்படும் சொற்களின் பொருள் மாற்றம் அடையுமா?
13. சோழர் காலத்தில் ஆட்சிமொழிச் சொற்கள் பெரிதும் எதில் இருந்தன?
14. சங்க இலக்கியத்தில் வடமொழிக் கதைகள் எவ்வாறு தமிழில் இடம்பெற்றுள்ளன?
15. சீவக சிந்தாமணி சமஸ்கிருதத்திலுள்ள எந்த நூலின் தழுவல்?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. அறிவுத்தேடல் எங்ஙனம் உருவாகும்?
2. மொழிபெயர்ப்புக்கும், மொழியாக்கத்திற்கும் உள்ள வேறுபாடு என்ன?
3. தழுவல் என்றால் என்ன?
4. தமிழ் ஆட்சிமொழிச் செயலாக்கத்தில் மொழிபெயர்ப்பின் பங்கு என்ன?
5. சென்னை மாகாண அரசு தயாரித்த கலைச்சொற்களின் அகராதியைப் பற்றிக் கூறுக.
6. சொல்லாக்கம் எவ்வாறு அமைதல் வேண்டும்?
7. தொடக்கக் காலத்தில் தமிழில் அறிவியல் நூல்கள் எவ்வாறு வெளியாயின?
8. தமிழில் விளம்பரங்கள் எவ்வாறு தயாரிக்கப்படுகின்றன?

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) மொழிபெயர்ப்பின் பயன்கள் குறித்துக் கட்டுரை வரைக.

   (அல்லது)

   (ஆ) சமய நூல்கள் மொழிபெயர்ப்பு பற்றிக் கட்டுரை தருக.

2. (அ) பல்கலைக்கழகங்கள், நிறுவனங்களின் மொழிபெயர்ப்பு பணிகள் குறித்து எழுதுக.

   (அல்லது)

   (ஆ) சொல்லாக்க வகைப்பாடுகளை ஆராய்க.

3. (அ) சொல்லாக்கமும் அகராதிகளும் குறித்து விவரி.

   (அல்லது)

   (ஆ) சங்க கால சமய மொழிபெயர்ப்புகள் குறித்து கட்டுரை தருக.

❋❋ ❋